காஞ்சி

ஆசிரியர்: சி.என். அண்ணாதுரை

மலர் 1 இதழ் 20





தாமாகச் சிக்கிக்கொண்டு!

மலர் 1 6—12—64 இதழ் 20

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக அரசியல் உலகில் இடம் பெற்று, எண்ணற்ற நிகழ்ச்சிகளைக் கண்டு, எத்தனையோ ஆண்டுகள் பதவியில் இருந்து, பரந்த, விரிந்த, ஆழ்ந்த அனுபவம் பெற்றவர் முதலமைச்சர் பக்தவத்சலனார்.

தமது அறிவாற்றலில் அளவு கடந்த நம்பிக்கை கொண்ட அவருக்கு, வேறு எவரிடத்தும் எத்தகைய திறமையும் தகுதியும் இல்லை என்ற அழுத்தமான எண்ணமும் உண்டு என்பதை அடிக்கடி அவர் தமது சொல்லாலும் செயலாலும் மெய்ப்பித்துக்கொண்டு வந்திருக்கிறார்.

எத்தகைய அரசியல் நிகழ்ச்சிக்கும் கிளர்ச்சிக்கும் அசைந்து கொடுக்காமலிருப்பதில் வல்லவர் என்ற விருதையும் தேடிக்கொண்டவர் முதலமைச்சர்.

நிகழ்ச்சிகளின் தன்மை, கிளர்ச்சிகளின் விளைவுகள் ஆகியவைபற்றி எண்ணிப் பார்த்திடக்கூடத் தேவையில்லை என்ற அளவுக்குத் தம்மை உயர்த்திக் கொண்டுவிட்டவர்.

துளியும் பரபரப்பு அடையமாட்டார், ஆடிக் காற்றுக்கு அணைந்துவிடும் அகல் விளக்காகமாட்டார், அலைமோதிடினும் கரைந்திடாத கற்பாறை போன்றார் அவர் என்று, தம்மைப் பிறர் கருதிக்கொள்ளத்தக்க விதமாக, உணர்ச்சிகளை உள்ளடைக்கி உள்ளடைக்கி, பதவி ஓட்டுக்குள் பதுங்கிடும் ஆமையாகிவிடுபவர், முதலமைச்சர்.

இவை தேவைப்படும் இயல்புகள் என்றோ, மக்களாட்சிக்கு உகந்தவைகள் என்றோ நாம் கூறவில்லை. மாறாக, இவை முற்றிலும் தேவையற்றன, தீதுபயப்பன.

எனினும் இந்த இயல்புகளை இவர் பெற்றவர் என்று இருந்து வந்த நிலையினையும், சின்னாட்களாக இவர், தாமாகக் கெடுத்துக்கொள்கிறார்! ஏனோ, தெரியவில்லை.

எதற்கெடுத்தாலும் கோபம் பொத்துக்கொண்டு வருகிறது; எவரிடமும் வம்புக்கு நிற்கவேண்டும் என்ற துடிப்பு மேலெழுகிறது.

ஒரே 'சவால்' மயம் இப்போதெல்லாம்!

அவருக்குச் சவால், இவருக்குச் சவால் என்று கிழமைக்கு நான்கு சவால்களாவது விடுத்தவண்ணம் இருக்கிறார்; விறுவிறுப்பாகப் பணியாற்றும் வீரரிடம் தான் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறோம் என்று விருதையார் எண்ணி மகிழவேண்டும் என்பதற்குப்போலும்!

சென்ற கிழமை, தமிழரசுக் கட்சித் தலைவர் ம. பொ. சிவஞானம், தி. மு. கழகப் பொதுச்செயலாளரைக் கண்டு பேசினார்.

இருவரும் இருவேறு நாட்டவரும் அல்லர்; தேர்தலில் 'அணி' அமைத்துக்கொண்டு ஆதாயம் தேடிட முனைந்தவர்களும் அல்லர். தமிழர் நலனுக்காக ஆற்ற வேண்டிய பணியினில், எந்தெந்த முறையில் ஒன்றுபட்டுப் பணியாற்றலாம் என்பது குறித்துக் கலந்து பேசவும், திட்டம் வகுக்கவும், முறை காணவும் முனைந்தனர். இது முதல் அமைச்சருக்கு, அடக்கிக்கொள்ள முடியாத அளவு ஆத்திரத்தைக் கிளப்பிவிட்டது. கொள்கையில் முரண்பட்டவர்கள், எமை எதிர்ப்பதற்காகவே கூடுகின்றனர் — இந்தக் கூட்டு நிலைக்குமா? என்று கடாவிவிட்டு, அவரே அதற்கு விடையும் அறைகிறார்.

ம. பொ. சிவஞானம் மேற்கொண்டுள்ள முயற்சி, முதல் அமைச்சரின் இந்த முடுக்கு காரணமாக, துவக்கத்திலேயே நாடுகூர்ந்து கவனித்திடத்தக்க நிலையைப் பெற்றுவிட்டது.

எதற்கும் அசைந்து கொடுக்காதவர் என்ற பெயரைப் பெற்றிருக்கும் முதமைச்சர் பக்தவத்சலம் அவர்களையே, இந்த முயற்சியின் முதற் கட்டம் இந்த அளவுக்குப் பரபரப்பு அடையச் செய்துவிட்டிருக்கிறது!

பரபரப்பு அடைந்ததுடன் இல்லை, முதலமைச்சர் சவால்களை வீசியபடி, கிளம்புகிறார்.

தமிழ் பாடமொழியாதல் வேண்டும், எமக்கு வேண்டும் என்று கூறிடும் ஆர்வமுள்ள மாணவர்களைத்

திரட்டிட, தி. மு. கழகத் தலைவர் தயாரா?—என்ருரு சவால்!

இந்த அறைகூவலைக் கேட்டதும், நாடி நரம்புகள் அனைத்தும் ஒடுங்கிப்போன நிலையினராகிவிடுவர், கழகத்தார் என்று எண்ணிக்கொண்டார் போலும்.

தாமாகச் சிக்கிக்கொண்டு விடுகிருர், முதலமைச்சர்.

மாணவர் அணியா திரட்டிட வேண்டும்! முதலமைச்சர் அவர்களே! பக்தவத்சலனுரே! பதவியை விட்டுக் கீழே இறங்கும், தமிழ் பாடமொழி பயிற்சி மொழி என்பதிலே ஆர்வம் கொண்ட மாணவர் படை திரண்டெழும்! பதவி விலகத் தயாரா!!—என்று ம. பொ. சிவஞானம் ஒரு அறைகூவல் எழுப்பிவிட்டார்! இடி கேட்ட நாகத்தினும் துடிதுடித்துப்போவார், முதலமைச்சர்; பதவியை விட்டுவிடச் சொல்லி ம. பொ. சிவஞானம் கூறுவது கேட்டு.

தமிழரசுக் கழகத்தவர், கலை உலகில் மதிப்பு மிக்க இடம் பெற்றவர், நண்பர் டி. கே. சண்முகம் எதையும் அளந்து பேசியே பழக்கப்பட்டவர். முதலமைச்சரின் முடுக்கான பேச்சுக்கு அவர் ஒரு முத்தான மறுப்பினை அளித்திருக்கிருர்.

> அமைச்சர் ஏறே! மாணவர்களின் விருப்பம் அறிந்து, ஒப்பம் பெற்று, பிறகே, தமிழைப் பாடமொழியாக்குவது என்று நியாயம் பேசுகிறீரே; அதே நியாயத்தின்படி இந்தி மொழி விஷயமாக நடந்துகொள்வீரா? இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி, மாணவர்களின் கருத்தறிய ஏற்பாடு செய்து, மாணவர் அளித்திடும் தீர்ப்பினை ஏற்றுக் கொள்வீரா?

என்று டி. கே. சண்முகம் கேட்டிருக்கிருர்.

ஒரு 'சவால்' விடக் கிளம்பி, இப்போது இரண்டு அறைகூவல் தம்மை நோக்கிப் பாய்ந்திடும் நிலை பெற்றுள்ளார், மலைகுலைந்தாலும் மனம் குலையாதவர் என்ற விருது பெற்றவர் என்கிருர்களே அந்த முதலமைச்சர்.

தாமாகச் சிக்கிக்கொண்டு இடர்ப்படுகிருர் பரிதாபம்.

பதவியா! இது எனக்குத் துச்சம்! இதோ உதறி விட்டேன்! என்று கூறத் துணிவு ஏற்படுமா! அவருக்கா!! அரசியல் அதிர்ச்சி வைத்தியம் என்று கூறப்பட்ட காமராஜர் திட்டத்தின்போதே, அசைந்து கொடுக்காதவராயிற்றே, இப்போது 'தவமாய்த் தவமிருந்து' பெற்ற பதவியை விட்டுவிடவா துணிவு வரும்!

மற்றவர் போலவா இவர்; இவர் பொதுமக்களுக்குப் பணியாற்றுவதற்காகவே பதவியில் இருப்பவராயிற்றே! விடுவாரா!!

ஆனால் விடுவீரா? என்று, ம. பொ. சிவஞானம் கேட்ட காரணம்? காரணமற்று, அவர்மீது முதலமைச்சர் காய்ந்தால், அவர் எதற்காக, இவர் யார்? என்பதை வெளிப்படுத்தத் தயங்க வேண்டும்! ஒரு அறைகூவல் மூலம், முதலமைச்சருக்கும் பதவிக்கும் உள்ள பிரிக்கப்படவே முடியாத 'பாசம்' இருப்பதனை, நாடறியச் செய்கிருர் ம. பொ. சிவஞானம்.

குறுநடைபயிலும் சிருர்க்குக் கூறுதல்போல, மாணவர்கள் விரும்பி, ஆர்வத்துடன் வந்தால்தானே தமிழ் பயிற்சி மொழியாகும் திட்டத்தைச் செயல்படுத்த முடியும் என்று பேசிவிட்டார், அதிகம் பேசாதவர் என்ற பெயரெடுத்த முதலமைச்சர்.

அப்படியா, ஐயனே! அந்த நியாயத்தை, இந்தி புகுத்தும் பிரச்சினையில் காட்டுமே! இந்தி வேண்டுமா, வேண்டாமா என்பதற்கு மாணவர்களின் கருத்தறிய வாருமே! என்று அறைகூவி அழைக்கிருர் டி. கே. சண்முகம்.

ஆகவே, முதலமைச்சர் தாமாகச் சிக்கிக்கொண்டுள்ள நிலையில் இந்த இரு அறைகூவலுக்கும் பதில் அளித்தாக வேண்டி ஏற்பட்டுவிட்டது.

பிரச்சினையைக் குழப்புவதற்காக, வீம்பு பேசிப் பார்க்கிருர், முதலமைச்சர்.

உள்ள பிரச்சினையும் எழுந்துள்ள கேள்வியும், தெளிவானது, திட்டவட்டமானது.

தமிழைப் பயிற்சிமொழியாக எல்லாக் கல்லூரிகளிலும் 1962-ல் ஆக்கிவிடுவோம் என்பது சர்க்கார் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி. சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட, கொள்கை.

காங்கிரஸ் கட்சியின் தேர்தல் அறிக்கைகளில் உள்ளது.

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மீறிவிட்டது இந்த அரசு என்பதும்; தேர்தல் அறிக்கையில் வகுத்துக்காட்டி இருந்த கொள்கையைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டது அரசு நடாத்தும் காங்கிரஸ்கட்சி என்பதும், இன்று தெளிவாகத்தெரிகிற பிரச்சினை.

இதற்கு என்னபதில் தருகிறது அரசு?

இயலவில்லை என்று கூறி தோல்வியை ஒப்புக் கொண்டு, மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறதா?

இல்லை, இல்லை, இது எம்மால் மட்டும் அல்ல, எவர் ஆளவந்தாலும் தமிழைப் பயிற்சி மொழியாக்கிடும் திட்டத்தை நடத்திட முடியாது என்று கூறுகிறதா?

அவ்விதம் கூறுமானுல்; அதற்காக மாணவர்மீது பழி போடுமானுல், நாம், தயக்கமின்றிக் கூறுகிருேம், தமிழ் பயிற்சி மொழி ஆக்கப்படும் திட்டம் நிறைவேற்றப்படக்கூடியது; பொது மக்கள் வாய்ப்பளித்தால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றத்தக்க அரசு அமையும்.

அத்தகைய அரசு அமையுமுன்னம், இன்றுள்ள அரசு, தமிழ்மொழி விஷயத்திலும், உணவுப் பிரச்சினையிலும், கொடுமை மிகுந்த, இலங்கை ஒப்பந்தப் பிரச்சினையிலும் எத்துணை மோசமாக, எதேச்சாதிகாரமாக நடந்துகொண்டு வருகிறது என்பதனை உணர்ந்தவர்கள், அந்தப் போக்கினை எதிர்த்துக் கிளர்ச்சி நடாத்திடாமல் இருப்பது, அறமுமல்ல, அரசியலுமாகாது.

கிளர்ச்சி எத்தன்மையில் இருத்தல்வேண்டும், கூடுமானவரையில், விரிவான ஒரு அமைப்பு ஏற்படத் தக்கவிதமாகக் கிளர்ச்சியினை வகுத்திடுதல் எம்முறையில் என்பதுபற்றி பேசினர், ம. பொ. சிவஞானமும், தி. மு. கழகப் பொதுச் செயலாளரும்! இதிலென்ன முறைகேடு காண்கின்ருர் முதலமைச்சர் ஏனே, வீணுகத் தாமாகச் சிக்கிக்கொண்டு இடர்ப்படுகிருர்!!

முகப்பில்:

சென்னை மாநராட்சி மன்ற

கழக மேலர்

தோழர்: சிட்டிபாபு அவர்கள்

காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்

காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளின் நேர்த்தியை அறிந்து பாராட்டுபவர்கள் இங்கு மட்டுமல்ல, வெளிநாடுகளிலும் நிரம்ப இருக்கிருர்கள்.

சரிகை இழையும், ஓவிய வேலைப்பாடுகளும் மிகுந்ததாகத் தயாரிக்கப்படும், காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், எந்த நாட்டுச் சீமாட்டிகளும் விரும்பிடத்தக்க வனப்பு வாய்ந்தன.

கைத்திறன் மிக்க, இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்போரின் புகழ் மேலும் பரவிடத்தக்க முறையில் பட்டுச் சேலைகளுக்கு மதிப்பு வளர்ந்து வருகிறது.

இப்போது, விமானத்தில் பணியாற்றும் பாவையர்க்கு, காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளைத் தர விமானத் துறை முடிவெடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மகிழ்ச்சிக்குரிய செய்தி,

விண்ணிலே சென்றிடும் விமானத்தில் பயணம் செய்திடும் பல்வேறு நாட்டினரும், தமக்குப் பரிவுடன் பணிவிடை செய்திடும் பாவையர், அணிந்திருக்கும் அழகளிக்கும் ஆடை காஞ்சிபுரம் பட்டுச் சேலை என்பதனை அறிந்து, அகமகிழ்ச்சியுடன் தத்தமது நாட்டினிலும் இந்த வனப்பு மிகு ஆடை அணி செய்திட வழி தேடுவர் என்று நம்புகிருேம்.

உலகின் பல பகுதிகளில் ஏற்கனவே புகழ் பெற்று விளங்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலையின் நேர்த்தி மேலும் பரவிடும் என்பதில் ஐயமில்லை.

ஆனுல், இத்தனை நாட்டினர் மெச்சிடத்தக்க நேர்த்தி மிகு பொன்னுர் இழைச் சேலையினை நெய்தளிக்கும் ஏழை நெசவாளியின் வாழ்க்கை எப்படி இருக்கிறது!

அவன் கைத்திறனின் புகழ், விண்முட்டுகிறது! அவனை வாட்டிடும் வறுமையோ அவனைக் கீழே கீழே அழுத்துகிறது.

தொழில் திறமையால் அவன் ஈட்டிடும் புகழ் விமானமேறிவிட்டது; அந்தத் தொழிலால் அவன் ஈட்டிடும் வருவாயோ அவனை, ஏன் பிறந்தோம் இந்தத் தொழில் செய்திட என்று வாட்டம் கொள்ளவைக்கிறது.

அந்த நெசவாளியின் வாழ்க்கை செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்ற எண்ணம், அவன் தொழில் நேர்த்தி பெற்றளித்திடும் புகழினைக் கேட்டு மகிழ்ந்திடும் அனைவருக்கும் ஏற்பட வேண்டும்.

கைதி எண் 6342



தம்பி!

வகுப்புக் கலவரம், உ, பிரதேச சட்ட மன்றத்துக்கும் நீதி மன்றத்துக்கும் இடையே கிளம்பியுள்ள 'உரிமை' மோதுதல் போன்ற செய்திகள், உள்ளபடி கவலை தருவனவாக உள்ளன. வடக்கே, வகுப்பு மாச்சரிய உணர்ச்சி மங்கவில்லை. எப்போதும் நீறு பூத்த நெருப்பாகவே இருந்துவருகிறது. இந்த நிலை இப்போதைக்கு மட்டுமல்ல, களையப்படும்வரையில், ஆபத்தைக் கக்கியபடியே இருக்கும் என்று தோன்றுகிறது. வகுப்பு மாச்சரிய உணர்ச்சி வடக்கே எந்த அளவிலே இருக்கிறது என்பதுபற்றி நண்பர்களிடம் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தேன். தமிழகத்தில் இயல்பாகவே அமைந்துள்ள 'சமரச' நோக்கம், உண்மையிலேயே பாராட்டிப் போற்றத்தக்கது என்றுபேசிக்கொண்டோம்

சிறையைப் பார்வையிடுவதற்காக மேயர் வரப்போகிறார் என்ற பேச்சு இங்கு இரண்டு நாட்களாக இருந்தது—பேச்சாகவே போய்விட்டது-வரக்காணோம். மேயர், கழக ஆதரவு பெற்றவர் என்று தெரிந்து கொண்ட 'கைதிகள்' மேயர் வரப்போகிறார் என்று அறிந்ததும், எங்களிடம் புதிய தனிமரியாதை காட்டினார்கள்.

சட்டமன்றத்தில், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்கள், திருவள்ளுவர் திருஉருவப் படத்தைத் திறந்துவைத்த செய்தியும், அந்த நிகழ்ச்சி பற்றிய படங்களும் இதழ்களில் வெளிவந்திருக்கக்கண்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தோம். இத்தனை காலத்துக்குப் பிறகாகிலும், வள்ளுவருக்கு ஆட்சி மன்றத்திலே 'இடம்' தந்து பெருமை தேடிக்கொள்ள முடிந்ததே என்பதிலே மகிழ்ச்சி. வெளியில் இருந்திருந்தால் இந்த நாளை ஒரு திருநாளாகக் கொண்டாட வேண்டும் என்று கூறியிருப்பேன். அப்படி ஒரு எண்ணம் இருந்தது. சிறைக்கு உள்ளே இருந்துதான், அந்தச் சிறப்பான நிகழ்ச்சி பற்றி மகிழ முடிந்தது. வள்ளுவரின் திருஉருவப் படம், இந்த ஆட்சி மன்றத்தில் மட்டுமல்ல, உலக நாடுகளின் பெருமன்றத்திலேயே இடம் பெறத்தக்கது.

தென்னக வரலாற்றிலே ஒரு கட்டம் பற்றி சோவியத் ஆராய்ச்சியாளர்கள் ஒரு புதிய நூல் வெளியிட்டிருக்கிறார்கள் என்ற செய்தியைப் பார்த்தேன்.

இன்று 'நூற்பு வேலை' செய்யவில்லை—கதர் திட்டத்தின் பயனற்ற தன்மைபற்றி மாறன் முரசொலியில் தலையங்கம் எழுதியிருந்ததைப் படித்தோம்—ஆனால் அதனால் அல்ல, 'நூற்பு வேலை' நடைபெறாதிருந்தது; பஞ்சு தரப்படவில்லை.

அறப்போரில் ஈடுபட்டு இங்கு உள்ள தோழர்களில் இருவருக்கு உடல் நலமில்லை—சிறையில் உள்ள மருத்துவ மனையில் உள்ளனர். அவர்களைப் பொன்னுவேல் பார்த்துவரும் வாய்ப்பு கிடைத்ததால், செய்தி அறிந்து கொள்ள முடிந்தது.

26—3—64

இன்று எனக்கு டாக்டர், ஊசி போட்டார், மதியழகனுக்கு இலேசாக ஜுரம்; அவருக்கும் ஊசி போடப்பட்டது,

காலையிலிருந்து இங்கு ஒரே பரபரப்பு; ஒவ்வொரு பகுதியிலும், கூட்டுவதும் மெழுகுவதும், சாமான்களை ஒழுங்குபடுத்துவதுமாக இருந்தனர். காரணம், சிறை மாநில மேலதிகாரி, பார்வையிட வருகிறார் என்ற செய்தி 'செய்தி அளவோடுதான் முடிந்தது, என்றாலும்' ஒரு சிலமணி நேரத்தில், சிறையே புதுக்கோலம் கொண்டுவிட்டது.

சிறைத்துறை குறித்து, சட்டமன்றத்தில் நம்முடைய தோழர்கள் பேசியது முரசொலியில் விரிவாக வெளிவந்திருந்தது. குறிப்பாகக் கருணாநிதியின் பேச்சு மிகத்தரமாக இருந்தது, அரக்கோணம் ராமசாமிக்கு அளவில்லா மகிழ்ச்சி.

எம். ஜி. ராமச்சந்திரன் கழகப் பொதுக்கூட்டத்தில் பேசியது 'நம்நாடு' இதழில் வெளிவந்திருந்தது. உருக்கமான பேச்சு. கழகத்திடம் அவர் கொண்டுள்ள உள்ளன்பு தெள்ளெனத் தெரிகிறது. சில நாட்களாக நான் அடைந்திருந்த மனச்சங்கடம், அவர் கழகக் கூட்டத்தில் பேசினார் என்ற நிகழ்ச்சிபற்றி அறிந்ததால் நீங்கிற்று.

குழந்தைகளுக்கான விளையாட்டு 'ரயில்வே' அமைக்க, மாநகராட்சியில் ஏற்பாடு செய்யப்போவ தாக, முனுசாமி பேசியது பார்த்தேன். பரோடாவில், மிகப்பெரிய பூங்காவில், நான் அதுபோன்ற ஒரு அமைப்பைப் பார்த்திருக்கிறேன். முனுசாமியிடம் அப்போதே அதுகுறித்துச் சொல்லியும் வைத்தேன். இங்கும் அதுபோலவே அமைக்கத் திட்டமிடுவது மிகவும் வரவேற்கத்தக்கது. மாநகராட்சி மன்றத் தினரின் குழு ஒன்று 'பரோடா' சென்று முழு விவரம் தெரிந்துகொண்டு வருவது மெத்தவும் பயனளிக்கும்.

மகிழ்ச்சியுடன் பெருமையும் பெறத்தக்க முறை யில், மற்றோர் திட்டமும் மேற்கொள்ள மாநகராட்சி மன்றம் முனைவதுபற்றியும் அறிகிறேன். மயிலையில், திருவள்ளுவரின் சிலையினை அமைக்க ஏற்பாடு செய்யப் போவதாக முனுசாமி தெரிவித்திருக்கிறார். மிக நேர்த்தி யான யோசனை.

ஔவையார் சிலை ஒன்றினை, டில்லியில் உள்ள ஒரு அமைப்பில் — அது அமெரிக்க அரசுக்குத் தொடர் புள்ள அமைப்பு என்று அறிகிறேன் — அமைத்திருப்ப தாகச் செய்தி பார்த்தேன். மாநகராட்சி, ஔவை யாரின் சிலையையும், அமைத்திட முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். வெளியில் சென்ற பிறகு இது பற்றி நண்பர்களுடன் கலந்து பேச விரும்புகிறேன்.

இன்று 'பஞ்சு' கொடுத்துவிட்டார்கள் — நூற்பு வேலையும் நடைபெற்றது.

கிருத்துவமார்க்கம் நிலைபெற்ற பிறகு, அறிவுத் துறையினருக்கும் மார்க்கத் துறையினருக்கும் இடையே மூண்டுவிட்ட மோதுதல்பற்றிய பின்னணி கொண்ட 'ஏடு' முன்புபடித்து, பகுதியில் நிறுத்திவைத் திருந்தேன்—இன்று தூக்கம் வருகிற வரையில், அந்த புத்தகத்தைத்தான் படிக்க இருக்கிறேன். மார்க்கத் திலே புகுந்துவிட்ட மாசுகளைப் போக்கவேண்டும், தூய் மைப்படுத்தவேண்டும் என்று துவக்கப்பட்ட ஒரு இயக் கத்தையே, கெடுமதியாளர் கூட்டம், கடவுள் மறுப்புக் கும்பல் என்றெல்லாம் தூற்றி கொடுமைப்படுத்தும் சம்பவங்கள் இந்த ஏட்டிலே விளக்கப்பட்டுள்ள.

27—3—64

இன்று கிருத்தவ மார்க்கத்தாருக்குத் திருநாள் — சிறையில் விடுமுறைநாள். ஞாயிற்றுக்கிழமைபோலவே இன்று கைதிகளுக்கு 'வேலை' கிடையாது; நாங்கள் கைதி உடை அணியத் தேவையில்லை. விடுமுறை நாள் என்பதால் இன்று மாலை 5 மணிக்கெல்லாம், எங்களை அறையிலே தள்ளிப் பூட்டிவிட்டார்கள். வார்டர்களில் சிலர், கண்டிப்புக்குரலால் காரியம் சாதிப் பவர்கள், சிலர் கனிவுகாட்டியே காரியம் சாதிப்பவர்கள். இன்று விடுமுறைநாள் சற்று முன்னதாக 'லாக்-அப்' வேலை முடிந்துவிட்டால், வீட்டுக்குப்போகச் சவுகரிய மாக இருக்கும்......" என்று கனிவாகப் பேசும்போது, நாங்களே வேலைகளைச் சீக்கிரமாக முடித்துக்கொண்டு, அறைகளிலே சென்று அமர்ந்துவிடுவது தானே முறை? அந்த முறையில் மாலை ஐந்துக்கே, உள்ளே சென்று விட்டோம்—பூட்டிவிட்டு; அதை இழுத்துப் பார்த்து விட்டு, வார்டர்கள் சென்றுவிட்டார்கள். மற்றப் பகுதி களில் இரவில், மணிக்கு ஒருமுறை வார்டர்கள் வருவார் கள்; இங்கு அனேகமாக, இரவுக்காலத்தில் வார்டர்கள் வருவதில்லை. அதனால், அடைபட்டுக்கிடக்கும் எங்களுக்கு ஏதேனும் திடீரென்று உடல்நலக் குறைவு ஏற்பட்டுவிட்டால், எந்தவிதமான உதவியும் கிடைப் பதற்கு வழி இல்லை. இது கவலைதரத்தக்க நிலை.

இன்றுகாலை, மதியழகன் சொன்னார், இரவெல்லாம் காய்ச்சல் — விடியும்போதுதான் வியர்வை கண்டது என்று. சோர்வு அதிகம் தெரிகிறது. இந்த நிலையிலும், வார்டர்கள் வருவதில்லை என்றால் என்ன சொல்லுவது.

எனக்கு இடக்கரத்திலே உள்ள வலி சற்று வளரு வதுபோல் தோன்றுகிறது, வலி போக்க, தாப்பட்டுள்ள தைலத்தைக் காலையிலே தடவிக்கொண்டு பார்த்தேன் — மாலையில், தண்ணீர் கொதிக்கவைத்து வலியுள்ள இடத்திலே ஊற்றிக்கொண்டு பார்த்தேன் — அந்த நேரத்துக்கு 'இதம்' தெரிகிறது, அவ்வளவே.

இங்கே இப்பொழுதே, வார்டர்களும் வேலை செய் வோரும் எங்கள் 'விடுதலை'பற்றிப் பேச ஆரம்பித்து விட்டார்கள். குறைந்தது ஒருமாதகாலமாவது, தண் டனைக் காலத்திலே 'கழிவு' ஆகிவிடும் என்று பேசிக் கொள்கிறார்கள். இதுபற்றிய பேச்சுதான், இங்கு பொழுதுபோக்காகி இருக்கிறது.

சட்டமே செல்லாது என்று உயர்நீதிமன்றம் அறிவித்துவிடப்போகிறது, நீங்களெல்லாம் விடுதலை ஆகப்போகிறீர்கள் என்றும் சிலர் சொல்லுகிறார்கள்.

பொதுவாக அனைவருக்கும், குறிப்பாகப் பொது வாழ்வுத் துறையினருக்கும், அன்றாடம் பத்திரிகைகள் பார்த்து உலகநிலை, நாட்டுநிலை, கட்சிநிலை, ஆகிய வற்றினைத் தெரிந்துகொள்வதிலே, ஆர்வம், துடிப்பளவு இருப்பது இயற்கை. ஆனால், இந்தத் துடிப்பினுடைய முழுவேகத்தை உணரவேண்டும் என்றால், சிறையிலே தான் உணரமுடியும். எத்தனை ஆவல், ஆர்வம், துடிப்பு. பத்திரிகைகள் கைக்குக் கிடைத்த உடன், பலநாள் பசித்துக்கிடந்தவன், விருந்து கிடைக்கப்பெற்றால் எத்துணை பதைப்பு ஏற்படுமோ, அப்படிப்பட்ட ஒரு பதைப்பு. ஒரு எழுத்துவிடாமல், படித்துப் படித்துச் சுவைக்க முடிகிறது. பத்திரிகைச் செய்திகளைப்பற்றி ஒருவருக்கொருவர் உரையாடல், கருத்துரைகள் வழங்கிக்கொள்வது இப்படி.

எழுதிய எழுத்து உலருவதற்கு முன்பு, நான் சொன்ன ஒரு விஷயம் பொய்த்துவிட்டது. இப்போது ஒரு வார்டர் இங்கு வந்திருந்தார் — இன்னும் தூக்கம் வரவில்லையா என்று கேட்டுவிட்டுச் சென்றார். ஒரு

சமயம் வார்டர்களே வருவதில்லை என்று நண்பர்கள் குறைபட்டுக்கொண்டது, எட்டவேண்டிய இடத்துக்கு எட்டி, வார்டர் வந்திருக்கிருரோ, என்னவோ!

படித்து முடித்துவிட்ட 'வால்காவிலிருந்து கங்கை வரை' என்ற புத்தகத்'திலிருந்து சில குறிப்புகள் எடுத்தேன்.

சிறையில் கைதிகளுக்கு உணவளிக்க எவ்வளவு செலவிடப்படுகிறது என்பதுபற்றிச் சட்டசபையில் அமைச்சர் கணக்களித்திருந்தாரே அதுபற்றி இன்று பிற்பகல் இங்கே நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தனர். செலவு மிகக்குறைவு என்றும் கூறிவிட முடியாது; பண்டங்கள் தரப்படுவதே இல்லை என்றும் சொல்வதற்கு இல்லை; ஆனல், பண்டங்கள் பாழாகும் விதமான சமைக்கும் முறைதான், இங்கு சங்கடத்துக்குக் காரணம். கைதிகளே சமைக்கிருர்கள்—சமயல் முறை தெரியாதவர்கள். அதனல் பண்டங்கள் பாழாக்கப்பட்டு கைதிகள் சுவையையோ, வலிவையோ பெறமுடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது.

முற்காலத்திலே இருந்ததைவிடச் சிறை எவ்வளவோ மேல் இப்போது என்று அமைச்சர்கள் பேசியிருக்கிருர்கள்—அதுபற்றி இங்கு நண்பர்கள் விவாதித்தனர். விளக்கொளி, உடை, அலுமினிய பாத்திரம், காற்ருேட்டத்துக்கான வழி, இவைகளெல்லாம் இப்போது உள்ளன! முன்பு இருட்டு, மண்பாண்டம், அழுக்குடை, குகைபோன்ற அமைப்பு இவை இருந்தன; இது முன்னேற்றமல்லவா என்று அமைச்சர்கள் கேட்கிருர்கள்.

அவர்கள் குறிப்பிடும் நிலைமை சிறையிலே இருந்த நாட்களில், வெளியிலேயே, இருட்டும் இடர்ப்பாடும் மிகுந்திருந்தன; அதனுடைய மறு பதிப்பாகச் சிறை இருந்தது. இப்போது, வெளியே அமைந்துள்ள வாழ்க்கை முறையில், ஒளியும் காற்றும், தூய்மையும் துப்புரவும் புகுத்தப்பட்டுவிட்டிருக்கிறது; ஆகவே அதனுடைய சாயல், சிறையிலும் இருக்கவேண்டும்—இதனை அமைச்சர்கள் மறந்துவிடுகிருர்கள். முன் பிப்பாயில் போட்டு உருட்டுவது, சுண்ணும்புக் காளவாயில் போட்டு வேகவைப்பது, கழுமரத்தில் ஏற்றுவது மாறுகால் மாறுகை வாங்கி விடுவது, யானை காலில் இடர வைப்பது, இப்படிக் கொடுமைப்படுத்தும் முறைகள் நிரம்ப இருந்தன. அந்தக் காலத்தைத்தான் காட்டுமிராண்டிகள் காலம் என்கிருேம். அவைகளைக் கவனப்படுத்தி, அவைகளைவிட, கசையடி பரவாயில்லை அல்லவா, கைகாலுக்கு விலங்கிடுதல் பரவாயில்லை அல்லவா என்று கேட்பது, வாதமுமாகாது, மனிதத் தன்மையின் மேம்பாட்டை வளர்க்கும் வழியுமாகாது. சிறை கொடுமைப்படுத்த உள்ள இடம் என்ற கொள்கை, காட்டுமிராண்டித்தனத்தின் ஒரு கூறு. திருத்துவதற்கான இடம் சிறை என்பதுதான் நாகரிக நாட்டினர் ஒப்புக்கொண்டுள்ள கருத்து. இந்தக் கருத்தை இங்குள்ள அரசு ஒப்புக் கொள்கிறதா மறுக்கிறதா என்பதுதான் பிரச்சினை. நமது கழகத் தோழர்கள் சட்டமன்றத்தில் இதனை எழுப்பினர்கள்—அமைச்சர் அவையினர் பொருத்தமான பதிலோ, விளக்கமோ தரவில்லை. பல்வேறு குற்றங்களை இழைத்துவிட்டு வந்தவர்கள், இதே காங்கிரஸ்காரர்கள் ஜெயிலில் இருந்தபோது, என்னென்ன ஆர்ப்பாட்டம் செய்தார்கள்? சிறையை அப்படித் திருத்தப் போகிருேம் இப்படி மாற்றப் போகிருேம் என்றெல்லாம் பேசினர்கள், பதவியில் உட்கார்ந்ததும் அதை எல்லாம் காற்றிலே பறக்க விட்டுவிட்டார்களே என்று கேலி பேசுகிருர்கள்.

டில்லி மேலவைத் தேர்தலில் நண்பர்கள் சமதும் மாரிசாமியும் வெற்றி பெற்றது பத்திரிகைகளில் வெளி வந்திருந்தது. இங்கு நாங்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தோம்.

28—3—64

இன்று அறையினுள் அடைக்கப்பட்டதிலிருந்து கிட்டத்தட்ட முக்கால் மணி நேரம், கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றபடி, எதிர்ப்புறம் எழிலோடு விளங்கிக்கொண்டிருந்த நிலவைப் பார்த்தபடி இருந்தேன். அழகிய நிலவு, முழு நிலவுக்கு மறுதினம்! கிளம்பும் போது பொன்னிறம்! மேலே செல்லச் செல்ல, உருக்கி வார்த்த வெள்ளி நிறம்! எனக்கு எப்போதுமே நிலவைக் காண்பதிலே பெருமகிழ்ச்சி. கம்பிகளுக்குப் பின்னல் நின்றபடி பார்க்கும்போதும், பெருமகிழ்ச்சியே! சிறைப் படாத நிலவு, அழகினைச் சிந்திக்கொண்டிருக்கிறது—சிறைப்பட்டிருக்கும் எனக்குக் களிப்பை அள்ளிப் பருகிக் கொள் என்று நிலவு கூறுவது போலத் தோன்றிற்று. இங்கு வந்த இத்தனை நாட்களில் இத்துணை அழகு ததும்பும் நிலவை நான் கண்டதில்லை, கடலோரத்தில், வெண் மணலின் மீதமர்ந்து கண்டு இன்பம் கொண்டிட வேண்டும் அண்ணு! சிறைக்குள் இருந்தா!! என்று கேட்டுக் கேலி பேசுவர் என்பதால், அதிகம் இதுபற்றி எழுதாதிருக்கிறேன். இன்று உள்ள வானம் நிலவு அளிக்கும் ஒளியினல் புதுப் பொலிவு பெற்று விளங்குவது போலவே, என் மனமும் எனக்குக் கிடைத்த செய்தி காரணமாக மகிழ்ச்சியால் துள்ளியபடி இருக்கிறது. நண்பர்கள் நடராசனும், சி. பி. சிற்றரசும் மேலவைக்கான தேர்தலில் வெற்றி பெற்றுவிட்டனர் என்ற செய்தி கிடைத்தது, இன்று மாலை—நறுமணம் வீசும் சந்தனத்தை வேலைப்பாடு மிக்க வெள்ளிக் கிண்ணத்தில் ஊற்றித் தருவதுபோல, இந்த மகிழ்ச்சியான வெற்றிச் செய்தியை எனக்குத் தந்தவர், டில்லி மேலவைத் தேர்தலில் வெற்றிபெற்ற நண்பர் மாரிசாமி,

முதலமைச்சருடைய தனி அனுமதி பெற்று நண்பர் மாரிசாமி, ஆம்பூர் நகராட்சி மன்றத் தலைவராகியுள்ள சம்பங்கி, திருப்பத்தூர் நகராட்சி மன்றத் தலைவராகியுள்ள சின்னராஜு, வாணியம்பாடித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் வடிவேலு ஆகியோருடன் இன்று

மாலை என்னைக் காண வந்திருந்தார். சிறை மேலதிகாரிகள் தமது திறமை மிக்க கண்காணிப்பை நடாத்த அங்கு அருகிலே அமர்ந்திருந்தனர். நண்பர் மாரிசாமிக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்தேன், அவர் தம்முடைய நன்றியைக் கூறினர்.

காங்கிரஸ் வட்டார ஓட்டுகள் சில அவருக்குக் கிடைத்திருப்பது பற்றி, காங்கிரஸ் பெருந்தலைவர்கள் விசாரம் தரும் விசாரணை நடத்த இருப்பதாக காலைப் பத்திரிகைகளில் பார்த்தேன் — அதுபற்றி மாரிசாமியிடம் கேட்டேன்—எனக்குத் தெரிந்தவர்கள், வேண்டியவர்கள், காங்கிரஸ் வட்டாரத்தில், சில மந்திரிகள் மட்டுமே இருக்கிருர்கள்—அவர்களுடைய ஓட்டுகள் தான் கிடைத்திருக்க வேண்டும் என்று கூறினர். அவ்விதமாக, பத்திரிகை நிருபர்களிடம் கூறிவிட்டு வந்ததாகவும் சொன்னர். சுதந்திராக் கட்சிக்காரர் என்பதனல் மட்டுமல்ல, காங்கிரஸ் வட்டாரத்தின் பெரிய புள்ளிகளின் இயல்புகளை, நெருங்கிப் பழகி அறிந்திருக்கிறவர் என்பதாலே, இன்றையக் காங்கிரஸ் தலைவர்களிலே முதன்மையானவர்களுக்கு, மாரிசாமியிடம் கோபம்—கசப்பு — அச்சம்கூட! அவருடைய வெற்றியை அவர்கள், தங்கள் இதயத்துக்குத் தரப்பட்ட கசையடியாகவே கருதுவார்கள்.

திருப்பத்தூர் நகராட்சி மன்றத் தலைவர் சின்னராஜு, நமது இயக்கத்தவர் என்றாலும், எதற்கும் தாமாக முந்திக்கொண்டு வந்து நிற்கும் சுபாவம் உள்ளவரல்ல. சட்ட மன்றத் தேர்தலில் அவர் ஈடுபட்டதே என்னுடைய இடைவிடாத வற்புறுத்தலுக்குப் பிறகுதான். நகராட்சி மன்றத் தலைவர் தேர்தலிலும், ஈடுபட அவர் இலேசில் இடம் கொடுத்திருக்கமாட்டார். தேர்தலில் பல்வேறு வகையான எதிர்ப்புகள் இருந்தன என்று கூறினர். அவருடைய வெற்றி, நான் எதிர்பார்த்ததுதான் என்றாலும், காங்கிரஸ் கட்சியினர் தேர்தல் வேலைகளில் ஒரு தலைமுறை அனுபவம் பெற்றவர்களாயிற்றே என்பதை எண்ணிச் சிறிது கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். வெளியே சென்று அவரைக் காண, நாட்கள் பல ஆகுமே என்று எண்ணிக்கொண்டிருந்தேன்—அவரே இங்கு வந்தது என் ஆவலை அறிந்து வந்தது போலிருந்தது.

ஆம்பூர் சம்பங்கி, மிக அமைதியாகக் காரியத்தை, கணக்கிட்டு, முடிக்கும் இயல்பினர். விலைவாசிக் குறைப்புப் போராட்டம் காரணமாக என்னோடு வேலூர் சிறையில் இருந்தவர். அப்போதே, அவர் ஆம்பூர் நகராட்சித் தலைவராக வரவேண்டும் என்று பேசிக்கொண்டோம். எண்ணியபடியே நடந்தேறியது. ஆம்பூர் நகராட்சிக்கான தேர்தலின்போது இருந்த நிலைமைகள் பற்றிச் சிறிதளவு கூறினர்.

அவர்களைக் கண்டு விட்டுவந்து, இங்கு நமது நண்பர்களிடம் 'சேதி' கூறியபோது, அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்கள்.

இன்று காலையில், சிறை மாநில மேலதிகாரி, வந்திருந்தார்—இரண்டாயிரம் ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்குபவராம். நாங்கள் இருந்த பகுதிக்கு, சிறை அதிகாரிகளுடன் வந்திருந்தார். மிகப் பெரிய பொறுப்பான பதவியில் இருப்பவர், சிறை நிலைமைகளைக் கண்டறிய வரும்போது எங்களையும் பார்த்து, நாலு வார்த்தை பேசுவார், நிலைமை எப்படி? என்று கேட்பார் என்று நான் எண்ணிக்கொண்டிருந்தேன். கேட்டிருந்தால் சொல்லுவதற்கு ஏராளமான தகவல்கள் இருப்பதால் அல்ல. ஒரு பரிவு காட்டும் முறையில், பேசுவார் என்று நினைத்தேன். அவர், எங்கள் பகுதியின் கீழ்த் தட்டில் உலவினர்—நாங்கள் மாடிப் பகுதியில், நூற்பு வேலையில் இருந்தோம்—திரும்பிக்கூடப் பார்க்கவில்லை! சமயற்கட்டைப் பார்த்துவிட்டு, அங்கு இருக்கும் ஒரு அரச மரத்தைப் பார்த்துவிட்டுப் போய்விட்டார். வெள்ளைக்கார ஆட்சி ஒழிந்ததும், அதிகார வர்க்கத்தின் பழய மனப்பான்மையே ஒழிந்துவிட்டது என்றுவேறு பெருமையாகப் பேசிக்கொள்கிருர்கள்.

கம்யூனிஸ்டு கட்சியிலே 'பிளவு' விரிவாகிக் கொண்டு வருவதுபற்றி, நண்பர் மதியழகன், இன்றையப் பத்திரிகையைப் பார்த்துவிட்டுச் சொன்னர். ஆந்திராவில் சுந்தரய்யா—நாகிரெட்டி போன்ற புடம் போட்டு எடுக்கப்பட்டவர்களெல்லாம்கூட புரட்சி செய்திருக்கிருர்கள். என்னைப் பொருத்தமட்டில், கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு ஏற்படுவது, களிப்பூட்டும் நிகழ்ச்சி அல்ல—காங்கிரசை எதிர்க்க அமைந்துள்ள ஒரு கட்சி, வலிவிழந்து, காங்கிரஸ் எதேச்சாதிகாரத்தைப் புதுவலிவு கொள்ளச் செய்கிறதே என்பது, கவலை தருவதாகவே இருக்கிறது.

பொதுவாகவே இப்போது, எல்லாக் கட்சிகளிலும், இரு பிரிவுகள்—ஒன்றை ஒன்று பிற்போக்கு என்று கூறிக்கொண்டு, முளைத்து முடைநாற்றத்தைக் கிளப்பிவிடும் நிகழ்ச்சி ஏற்பட்டுவிட்டிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியில், வலதுசாரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி மொரார்ஜி போன்ருராலும், இடதுசாரி கிருஷ்ணமேனன், மாளவியா போன்ருராலும் நடத்தப்பட்டு வருகிற நிலைமை இருப்பதை, மறைக்கக்கூட முடியவில்லை.

கம்யூனிஸ்டு கட்சியில், டாங்கே கோஷ்டி, கோபாலன் கோஷ்டி என்கிருர்கள்.

பிரஜா — சோஷியலிஸ்டுகளில், மிஸ்ரா கோஷ்டி அசோக்மேத்தா கோஷ்டி என்கிருர்கள்.

திராவிடர் கழகத்தில் பெரியார் சுயமரியாதைக் கட்சி குருசாமி சுயமரியாதைக்கட்சி என்று பேசப்பட்டு வருகிறது.

மாற்ருர்கள் எத்துணையோ இட்டுக்கட்டியும் மூட்டிவிட்டுங்கூட, நமது கழகம் மட்டும் இத்தகைய கேட்டி

னுக்கு இறையாகாமல் இருந்து வருவதுபற்றி, வியந்து பேசிக்கொண்டிருந்தோம்.

இன்று பத்திரிகைகள், காங்கிரஸ் கட்சிக்குள் மூண்டுகிடக்கும் உட்பூசல்களை எவ்வளவோ மூடி மறைக்கின்றன—கேரளத்திலும் ஆந்திரத்திலும், ராஜ்ய சபைத் தேர்தலில், காங்கிரஸ்காரர்களே காங்கிரஸ் காரர்களைத் தோற்கடித்தனர். தேர்தல் தந்திரத்தில் தனக்கு மிஞ்சியவர் இல்லை, கட்டுப்பாட்டில் நிகர்வேறு இல்லை என்று விருது பெற்ற காமராஜர் கண் எதிரில், மாரிசாமிக்குக் காங்கிரஸ் ஓட்டுகள் கிடைத்துள்ளன!

இந்த நிலைமைகளோடு மிகப் பெரிய நெருக்கடியின்போதும், திராவிட முன்னேற்றக் கழகம், கட்டுப்பாட்டு உணர்ச்சியுடன் காரியமாற்றிவரும் கண்ணியத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் பொதுமக்கள், நமது கழகத்தைப் பாராட்டாமலிருக்க முடியாது. எந்த ஒரு கழகத் தோழரும், இந்த மேலான நிலைக்கு ஊறு நேரிடும்படியான சொல்லிலோ செயலிலோ தன்னை ஈடுபடுத்திக்கொள்ளக்கூடாது என்ற செம்மையான பாடத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

வெளியில் இருப்பவர்களுக்கு ஏற்படக் கூடியதைவிட, சிறைப்பட்டிருப்பவர்களுக்குத்தான், இந்த அருமையும், அதனால் கிடைக்கப்பெறும் பெருமையும் எழுச்சியைத் தந்திடும். நாம் சிறையில் இருக்கிறோம், நமது கழகம் வெற்றிமேல் வெற்றி பெற்று, மக்களின் நன்மதிப்பைப் பெற்று வளருகிறது என்பதனைவிட, உற்சாகமான வேறு உணர்ச்சி தேவை இல்லை அல்லவா? அத்தகைய வெற்றிகளை ஈட்டித் தரப் பாடுபடும் அனைவருக்கும், நன்றி கூறியபடிதான், சிறையிலே இருக்கிறோம்.

இவைபற்றி இன்று பிற்பகல் அன்பழகனிடம் பேசிக்கொண்டிருந்தேன். நகராட்சி மன்றத் தேர்தல்களில், நீங்கள் எதிர்பார்த்தவெற்றி கிடைத்ததா என்று கேட்டார்—பெரும் அளவு கிடைத்தது-ஆனால் சேலம், ராசிபுரம் இரண்டு இடங்களிலும் நான் அதிக அளவு வெற்றி எதிர்பார்த்தேன் — கிடைக்கக்காணோம் — பொதுவாக இதுபற்றி வெளியே சென்றபிறகு கண்டறியவேண்டும் என்று எண்ணியிருக்கிறேன் என்று தெரிவித்தேன். ஏன் இதற்கு ஒரு குழு அமைக்கலாமே என்றார்—குழு அமைத்து, இன்னின்னரால் குறைகள் ஏற்பட்டுவிட்டன என்று கிளறிக்கொண்டிருப்பதை நான் விரும்புபவன் அல்லவே என்பதை நினைவுபடுத்தினேன்.

நிலவைக்கண்டு களிப்பைப் பருகிக்கொண்டிருந்துவிட்டு, உடனே குறிப்பு எழுதவில்லை. இடையில் வைசாலி—தட்சசீலம் ஆகிய பழம் பெருமைமிக்க ஊர்களிலே உலவிக்கொண்டிருந்தேன்.—ராகுல் எழுதிய, சிந்து முதல் கங்கைவரை என்ற புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன். இனி, கெய்ரோ நகர் நோக்கி, கிருஸ்தவ அரசுகளின் படைகள் பாயும் நிகழ்ச்சிபற்றி —புனிதப் போர்பற்றி—(ஆங்கில) ஏடு படித்துவிட்டுத் தூங்க முயற்சிக்கவேண்டும். நேற்றிரவு இரண்டுமணியிலிருந்து நாலுமணி வரையில், கைவலியினால், தூக்கம் வராமல் கஷ்டமாக இருந்தது. இன்று பிற்பகலும் வலிதான். ஆனால் இப்போது இல்லை. நிலவின் அழகும், கழக வெற்றியின் நேர்த்தியும், வலியை விரட்டி இருக்கிறது என்று நினைக்கிறேன். பார்ப்போம்.

1—4—64

ஏப்ரல் மாதத் துவக்கம். இடையில் குறிப்பு எழுதாததற்குக் காரணம், ஏற்பட்டுவிட்ட மனச்சங்கடம். திடீரென்று டி. எம். பார்த்தசாரதிக்கு நெஞ்சுவலி கண்டது. கவலைப்படும் அளவுக்கு வலி விறுவிறுவென்று வளர்ந்து களைப்பு, மயக்கம் மேலிட்டுவிட்டது. சிறை மருத்துவர், சில மணி நேரம் பார்த்துவிட்டு, வெளியே மருத்துவமனைக்கு அனுப்பவேண்டும் என்றார். நாங்கள் அனைவரும் பயந்துவிட்டோம். அதற்கு ஏற்றபடி, பார்த்தசாரதியின் நிலைமையும் இருந்தது. மாலை ஏழுமணி இருக்கும், பார்த்தசாரதியை வெளி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, படிக்கட்டுகளில் இறங்கியதும், மயக்கம் அதிகமாகிவிட்டது. வார்டர் தாங்கிப் பிடித்துக்கொண்டு சென்றார் என்றாலும் சிறிது தூரம் நடப்பதற்குள் மயக்கம் மேலும் அதிகமாகி, நடந்து போக முடியாதநிலை ஏற்பட்டு, வார்டர்கள் பார்த்தசாரதியைத் தூக்கிச் செல்லும்படி ஆகிவிட்டது. இதைக் கண்ட எங்களுக்கு மேலும் திகிலாகிவிட்டது. வேறு எங்கும் பெறமுடியாத மேலான மருத்துவ உதவி, வெளி மருத்துவமனையில் கிடைக்குமென்பது தெரிந்திருந்தாலும், பொதுவாக நெஞ்சுவலி விபத்தாக முடிந்துவிடுவதை அறிந்திருந்த காரணத்தால், எங்களுக்குப் பெருத்த மனச்சங்கடம் ஏற்பட்டது. அன்று இரவு எனக்குத் தூக்கமே வரவில்லை. மறுநாளும் மருத்துவமனை சென்றுள்ள பார்த்தசாரதியின் நிலைமை

'காஞ்சி' சந்தாவிகிதம்

ஆண்டு சந்தா	ரூ. 10—00
ஆறுமாத சந்தா	ரூ. 5—00

ஆறுமாத சந்தாவிற்குக் குறைந்து அனுப்புவதற்கில்லை.

உரிமையாளர்,
'காஞ்சி' அலுவலகம்,
சின்ன காஞ்சிபுரம்.

எப்படி இருக்கிறதோ என்பதுபற்றிய கவலையே உள்ளத்தைத் துளைத்துக்கொண்டிருந்தது. சிறை அதிகாரிகளைக் கேட்டாலோ, மருத்துவமனைக்கு ஒரு கைதியை அனுப்பிய பிறகு, தொடர்பு வைத்துக்கொள்வதில்லை என்று கூறிவிட்டனர். பார்த்தசாரதி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டதுபற்றி, வில்லிவாக்கத்தில் உள்ள அவருடைய துணைவியாருக்குச் 'சேதி' தரும்படி சிறை அதிகாரிகளில் ஒருவரைக் கேட்டுக்கொண்டோம். அவர், வில்லிவாக்கம் போலீஸ் நிலையத்துக்குத் தொலைபேசிமூலம் செய்தி அனுப்பி, வீட்டாருக்குத் தெரிவிக்கும்படி ஏற்பாடு செய்வதாகக் கூறினார். இது ஓரளவுக்கு ஆறுதல் அளிப்பதாக இருந்தது. என்றாலும் கண்களில் நீர் தளும்பும் நிலையில், இங்கிருந்து பார்த்தசாரதி சென்றகாட்சி கண்முன் எப்போதும் நின்று, மனதை வாட்டியபடி இருந்தது. வயது 60. எப்போதும் மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்தபடி இருப்பது வாடிக்கை. நான் பலமுறை தடுத்தும், எந்த வேலையையும் அவரே மேற்கொள்வார். அந்த அளவு வேலை செய்யக்கூடியவலிவும் இல்லை. அதை அவர் உணர்ந்துகொண்டதாகத் தெரியவில்லை. இதன்றி வீட்டை ஒட்டிய கவலைகள்.

பொன்னுவேல் சமையல் காரியத்தைக்கவனித்துக்கொண்டார்; எனக்கும் மற்றவர்களுக்கும் சாப்பாட்டின் வகைபற்றிய எண்ணமே எழவில்லை. சிறை மருத்துவரிடம், பொன்னுவேலுவை அனுப்பி இருந்தேன்; அவர், பயப்படும்படியாக நிலைமை இல்லை; இருதயசம்பந்தமான வலி என்றுகூட திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை, பரிசோதனைக்காகத்தான், பெரிய மருத்துவமனைக்கு அனுப்பி இருக்கிறேன் என்று கூறி அனுப்பினார்.

எனக்கு ஊசிபோட மருத்துவர் வந்திருந்தார்; பெரிய மருத்துவமனை சென்று, நிலைமையைச் கண்டறிந்துவந்து கூறும்படி கேட்டுக்கொண்டேன். அன்று மாலையே, அவர், பெரிய மருத்துவமனைசென்று பார்த்தசாரதியைப் பார்த்துவிட்டுத் திரும்பி, கம்பவுண்டர் மூலமாக, கவலைப்படத்தக்கதாக ஏதும் இல்லை என்று செய்தி அனுப்பி இருந்தார். மிகுந்த ஆறுதலாக இருந்தது. தொடர்ந்து, சிறைக்காவலர்களில் ஒருவர், மருத்துவ மனைசென்று பார்த்துவிட்டுவந்து, பார்த்தசாரதி நல்லபடி இருக்கிறார் என்ற செய்தியைக் கூறினார்.

எங்கள் கவலையையும் கலக்கத்தையும் போக்கிடத்தக்கவிதத்தில் 1—4—64 மாலை, பார்த்தசாரதியே, இங்குத் திரும்பிவந்துவிட்டார். நேரிலே பார்த்த பிறகுதான் மன நிம்மதி ஏற்பட்டது. பரிசோதனைகள் செய்தது குறித்தும்; வீட்டாரும் நண்பர்கள் நடராசன், கருணாநிதி, நெடுஞ்செழியன், கிட்டு ஆகியோர் வந்து விசாரித்தது குறித்தும் பார்த்தசாரதி கூறினார். அதிகமாக வேலை செய்யக்கூடாது என்று கண்டிப்பாகக் கூறினேன். அவரால் வேலை செய்யாமல் இருக்க முடியவில்லை, சோர்வு நீங்கிவிட்டதாகத் தெரியவில்லை.

மனச்சங்கடம் காரணமாக, படிப்பதும் உரையாடுவதும், தட்டுப்பட்டுவிட்டிருந்தது.

வைசாலி—தட்சசீலம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த குடிஅரசுக்கும் மகதநாட்டின் முடியாட்சிக்கும் இடையே மூண்டுவிட்ட போர்பற்றி, ராகுல் விவரித்திருந்த பகுதியைப் படித்தேன்.

ஷேக்அப்துல்லா விடுதலை செய்யப்படுவார் என்று காஷ்மீர் முதலமைச்சர் விடுத்திருந்த அறிக்கைபற்றி பேசிக்கொண்டிருந்தோம்,

ஷேக்அப்துல்லா மீது தொடரப்பட்டுள்ள வழக்கு, பயங்கரமானது — அவருக்கும் அவருடைய கூட்டுத் தோழர்களுக்கும் ஆயுள்தண்டனை பெற்றுத் தரத்தக்க வழக்கு பாகிஸ்தானோடுகூடி, காஷ்மீர் சர்க்காரைக் கவிழ்க்கச் சதிசெய்தார் என்பது வழக்கு. பல இலட்சம் வழக்குக்காகப் பாழடிக்கப்பட்டது. இப்போது வழக்கினைத் திரும்பப் பெற்றுக்கொள்கின்றனர். பத்து ஆண்டுகளாக சிறைக்கொடுமைக்கு ஆளான ஷேக் அப்துல்லா, நிபந்தனையின்றி விடுதலை பெறுவது அவருடைய புகழொளியைப் பார் அறியச் செய்யும் என்பதில் ஐயமில்லை. காஷ்மீரத்தின் எதிர்காலமும், காஷ்மீருக்கும் இந்தியாவுக்கும் இடையே உள்ள தொடர்பின் நிலையும், இந்தச் சம்பவத்தினால் எந்த விதத்தில் உருப்பெறுகிறது என்பது இனித்தான் தெரிய வேண்டும்.

மொரார்ஜிதேசாய் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்வதுபற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். அடிமைப்பட்ட மக்களிடம் எஜமானன் கட்டளைகளைப் பிறப்பித்துக்கொண்டு செல்லும் விதமாக அவருடைய பேச்சு இருக்கிறதே தவிர, காரணம், விளக்கம், கனிவு ஏதும் காணோமே என்று நண்பர்கள் கேட்டார்கள். மனதிலே பட்டதை ஒளிவுமறைவு இல்லாமல் பேசுகிறார் இது ஒருவிதத்தில் பாராட்டத்தக்கது, நமது அமைச்சர்களைப்போல மூடி மறைத்து, மக்களின் நோக்கை வேறு திசையில் திருப்விடவில்லை; இதுபோன்ற பேச்சுதான், நமது மக்களுக்கு, உண்மையான நிலைமையை எடுத்துக்காட்ட உதவும் என்று நான் கூறினேன்.

மொரார்ஜியின் பேச்சில் மற்றோர் கருத்து — பேசாததன் மூலம்—தொனித்தது. பலரும் பாராட்டிப் பேசிய காமராஜ் திட்டம்பற்றி அவர் ஏதும் குறிப்பிடவே இல்லை. ஒருவேளை அதனால் பாதிக்கப்பட்டவர் என்ற காரணத்தால், அதுகுறித்துப் பேசவில்லைபோலும்!

அண்ணன்,

315
20
6-12-64

அந்திக்கலம்பகம்

“ஆமாம், என்ன இன்னக்கி ஒரு நாளும் இல்லாத திருநாளா, வெளியேபுறப்படாமலிருக்கிறது...”

“ஏன்! போ போன்னு துரத்தப் பார்க்கறயா...நான் வெளியே கிளம் பினதும் அந்தப் பெண்களோட அரட்டைக் கச்சேரி நடத்த...”

“நாங்க ஒண்ணும் அரட்டைக் கச்சேரியும் நடததல்லே வரட்டுக் கச்சேரியும் நடத்தறதில்லே...உல கத்து விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம்...ஏன், நீங்களே ஒருதடவை, எங்களோட பேச்சைப் பாராட்டினதுண்டே, கவனம் இருக்குதே...”

“வேடிக்கைக்காகச் சொன் னேண்டி ஏமு! அந்தப் பொண்ணு பொன்னிக்கு நல்ல குணம், நலல அறிவு...”

“பட்டு மட்டும் என்ன! கள்ள மில்லாம பேசும்......நல்ல சுபாவந் தான் அவளுக்கும்...”

“வக்கீல் வேலே பார்க்கறதுக்காக படித்த பொண்ணு! பேசத் தெரியாம லிருநதா என்ன பலன்? பேச வேண்டியதுதான்...”

“எங்களோட பேச்சை அரட் டைக் கச்சேரி என்று கேலி செய் கிறது இருக்கட்டும்; நீங்கள் நாலு ஆண்பிள்ளைகள் கூடும்போது என்ன வேத வேதாந்தமாப் பேசறிங்க...”

“நான் சொன்னனு அப்படி. ஆனு காரணமற்று சளசளன்னு நாஙக பேசறது கிடையாது...”

“தெரியுமே எனக்கு, உங்களோட பேச்சின் போக்கு. அவளோட கண் ணைப் பாரு, இவளோட கன்னத் தைப் பாரு, இவ மாநிறம் அவ செக்கச் செவேல்னு இருக்கிரு; என் வீட்டுக்காரி சுத்த அறிவுச் சூன்யம்; என்று இப்படி பெண்களைப் பற்றி வம்பளப்புப் பேசிக்கொண்டிருப்பது தானே உஙகளோட வாடிக்கை...”

“யார் சொன்னது அப்படி. பொன்னியா? பட்டுவா? பட்டுதான் சொல்லிஇருப்பா. அந்தப்பொண்ணு தான் படபடன்னு பேசும்...”

“ஏன், இதெல்லாம்கூட, எனக்கு யாராவது சொன்னுத்தான் தெரி யுமா? எனக்கென்ன துளிகூட மூளையே கிடையாதா...”

“அடி அம்மா மூளைநாயகி! உன் னேடு வாயாடி வெற்றிபெற என் னுலே ஆகாது. உன்னேட வம் பளந்து வீண்பொழுது போககறதை விட, இநதப் புத்தகததைப் படித்து முடிததாலாவது, மனதுக்கு ஒரு அமைதி ஏற்படும்...”

"அது என்ன புத்தகம், உங்க ளையே படிக்கத் தூண்டுகிற புத்தகம் ஏதாவது காதல் கதையா இருக்கும்...கொட்டு கொட்டுன்னு மழை கொட்டிக்கொண்டிருந்தது; சோகுலாவோட உடல் நடுநடுங்கிக்கொண்டிருந்தது பாதி பயம்; பாதி குளிர்... அப்ப அவளுடைய காதலுக்காகத் தவம் கிடந்து வந்த கனகசுந்தரம் அவளை அப்படியே அணைத்துக் கொண்டான்...அவ "ஆ" என்ருள் இவன் 'ஊ' என்ருன், இப்படி இருக்கும் கதை; படியுங்க, படியுங்க..."

"பலே! பலே! காதல் கதை எழுதுகிறவனெல்லாம், ஏமு! உன்னிடம் பிச்சை எடுக்கவேணும் போ! அப்படியே நடக்கிறது மாதிரியே சொல்லத் தெரிந்துகொண்டிருக்கறியே ......"

"பேச்சை வேறே பக்கம் திருப்பி என்னை ஏமாத்தப்பார்க்கவேண்டாம் உண்மையைச் சொல்லுங்க, அது காதல் கதைதானே...?"

"ஆமான்னுதான் எண்ணிக் கொள்ளேன்..."

"எண்ணிக்கொள்றது என்ன! வெளியேகூடப் போகாமப்படிக்கு, அப்படியே மூழ்கிவிட்டிருக்கிறிங்களே புத்தகததிலே, அதிலே இருந்தே தெரியலியா, அது எந்த மாதிரியான புத்தகம்னு..."

"சரி புத்தகத்தை மூடிவைத்து விட்டு, இல்லையாளு மூலையிலே போட்டுவிட்டு, உனனோடு சரசமாடவா; சொல்லு..."

"ஏன், நான் கொஞ்சம் இடம் கொடுத்தா எல்லா ஆட்டமுந்தான் ஆடுவிங்க... வயது என்ன? இன்னும் நாற்பதுகூட ஆகவில்லை...... வாலிபம்......சரி, சரி......விடுங்க கையை......இது என்ன வம்பாப் போச்சி......இதபாருங்க அந்தப் பொண்கள் வந்துவிடப்போகுதுங்க ...என்னைக் கேலி செய்து செய்து, உயிரை வாங்கிவிடுவா, பட்டு...... போய் புத்தகத்தைப் படிங்க..."

"ஏமு! இந்தப் புத்தகம் இருக்கே, இது 'காதல் கதையல்ல...கதைப் புத்தகமே இல்லா, தெரியுதா...இதனோட பேர் என்ன தெரியுமோ? சொன்னு, அந்தப் பெண்களிடம் சொல்லிவிட மாட்டயே..."

"எதையுமா அதுகளோட சொல்லிவிடுவேன்,.....சொல்லமாட்டேன்,.....என்ன புத்தகம்? பேர் என்ன?"

"புத்தகத்தோட பேரு, கல்யாணம் ஆனபிறகும் காதலிப்பது எப்படி? எனபது..."

"என்னது, என்னது...? கல்யாணம் ஆனபிறகு காதலா...! இது என்ன கேலிக்கூத்து...?"

"கேலியுமில்லே; கூத்தும் இல்லே ...வாழ்க்கையை எப்படி நடத்திக் கொண்டு போனு, திருமணம் ஆன பிறகு, புருஷனும் மனைவியும் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்பதை, இதிலே, விளக்கி எழுதப்பட்டிருக்குது..."

"காதல் கீதம் இதெல்லாம் வாலிபத்திலே ஏற்படுகிற சேஷ்டை காலாகாலத்திலே அதற்காகத்தான் பெரியவர்கள், கால் கட்டுப் போட்டு வைக்கறது..."

"அப்படி எண்ணிக்கொண்டு தான் ஏமு! கல்யாணம் ஆனபிறகு ஏதோ காமா சோமா என்று குடும்பம் நடத்திக்கொண்டிருக்கிரு. அது சரியல்ல, குடும்பத்திலே குதூகலமாக இருககவேண்டும்......காதல் வேண்டும் என்கிருர் இந்தப் புத்தகத்தை எழுதியவர்...படிக்கட்டுமா? கேட்கிறயா...?"

"போதும் போதும், நீங்க சுருக்கமாச் சொன்னதே போதும், காலட்சேபமே நடத்த ஆரம்பித்துவிட வேண்டாம்...நானே பிறகு படித்துக் கொள்கிறேன்......யாரு? இருங்க, யாரோ வர்ரமாதிரி இருக்குது..."

"யாரு! அந்தப் பெண்களாகத் தான் இருக்கும்...";

"வா பட்டு! பொன்னி, வா! வா!"

"வாம்மா பொன்னி! ஏமுவுக்குத் துணை கிடைத்தாச்சி, நான் இனி எதறகு? நான் போய்வர்ரேன் ஏமு! ......"

"ஏன்! என்னமோ பேசிக்கொண்டிருந்திங்கபோலிருக்குதே. நாங்க வந்து கெடுத்துவிடடோம்போலிருக்குதே..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை பொன்னி! நீ, வா; உட்காரு என்னமோ ஆபீஸ் விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார், வேறே ஒண்ணும் விசேஷமில்லே..."

"உங்க ஆபீசிலே ஓய்வு பெறுகிற வயது என்னன்னு குறித்து வைத்திருக்கா......"

"சும்மா இரேன் பட்டு! இவ்வளவு துணிச்சலா அவரிடம் பேசறதைப பார் ஏமு......!"

"பேசினு என்ன பொன்னி! பாதகமில்லே, பட்டு! எல்லா ஆபீசுகளுக்கும் இருப்பது போலத்தான் எங்களுக்கும். ஐம்பத்திஐந்து ஆனதும், வீட்டுக்கு அனுப்பிவிடுவா......என்னைப் பார்த்ததும் அந்தக் கேள்வி கேட்கவேணும்னு எதற்காக எண்ணம் வந்தது...?"

"சும்மா ஒரு பேச்சுக்குத்தான் கேட்டேன்...மன்னிச்சிடுங்க..."

"நீ என்ன தப்புசெய்தே, உன்னை மன்னிக்க......"

"அப்படிச் சொல்வதுதானே ஒரு மரியாதையான முறை......தயவு செய்து, வணக்கம் இந்தவிதமாக நம்ம பேச்சிலே சேர்த்துக் கொள்வது, ஒரு பண்புதானே..."

"உண்மைதான் பொன்னி! பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலே ஒருவருக்கொருவர் தாங்க்ஸ் ...அதாவது நாம இங்கே சொல்கிறமே, வந்தனம் என்று, அது போல......தாங்க்ஸ் சொல்லாமலிருக்க மாட்டார்களாம்......ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி, வாடகை கொடுப்பவன் வாடகை வண்டி ஓட்டுபவன், ஓட்டலில் சாப்பிடுபவன் ஓட்டல்முதலாளி என்ற இந்தப் பேதத்தைக் கூடப் பார்க்கமாட்டாளாம், 'தாங்க்ஸ்' என்ற பதத்தை உபயோகிக்கிற போது..."

"ஆமாம்...உங்க நாட்டிலே எந்த மொழியிலேயும், இந்த தாங்க்ஸ் என்ற பதத்துக்கு ஈடான பதம் இல்லையே, ஏன்? என்று, பீவர்லி நிகாலாஸ் என்பவர்கூட தம்முடைய புத்தகத்திலே எழுதியிருக்காரே..."

"அது யாருடி பொன்னி! பீவர்லி நிகாலாஸ்?"

"ஒரு மேனுட்டு ஆசிரியர் ஏமு! நான் பிற்பாடு சொல்றேன் விவரமா ..."

"சரி, நான் இருக்கிற வரையிலே நீங்க உட்கார்ந்து பேசமாட்டீர்கள் போலிருக்குது. என்னுலே ஏன் உங்களுக்குத் தொல்லை! ஏமு! நான்

போய்விடுகிறேன், நீயாக விரட்டாத தற்கு முன்பு..."

"வேடிக்கை வேடிக்கையாப் பேசருர்டி ஏமுவோட வீட்டுக்காரர் ......"

அப்படித்தான் இருக்கவேண்டும் பட்டு! கலகலன்னு பேசிச் சிரித்த படி, சந்தோஷமாக..."

"எங்களவர் எப்போதுமே அப்ப டித்தான்......பொன்னி! ஏன் இவ்வ ளவு தாமதமாச்சி வர..."

"பட்டு புறப்பட்டாத்தானே சீக்கி ரமா......மாற்றி மாற்றி மூன்று புடவை கட்டிக்கொண்டிருந்தா..."

"நீ அவசரப்படுத்தினதாலேதான் எனக்குக் குழம்பிப் போச்சி...இந்தப் புடவையா, அந்தப் புடவையா என்று குழப்பம்..."

"ஏதோ ஒண்ணை எடுத்துக் கட்டிக்கொண்டு வருவோம் என்று என்னைப்போலவா தோணும் பட்டு வுக்கு..."

"அப்படி ஒரே அடியாச் சொல்லி விடாதே ஏமா! நானென்ன அலங் காரவல்லியா என்ன..."

"அலங்காரவல்லியாக இல்லா விட்டா மாதத்துக்கு இரண்டு புது சேலை, நைலானும், வாயிலுமா வாங்கியபடி இருப்பயா...?"

"இந்த நைலான், வாயில் இதெல் லாம் ஏமு! நல்ல பட்டுப் புடவைக்கு ஈடாகுமா? பட்டுப்புடவை என்ன? இதோ நான் கட்டிக்கொண்டிருப் பது நூல் சேலைதான்; மென்மையா இல்லையா......"

"மென்மையாத்தான் இருக்குது ஏழு!"

"நூரும் நம்பர் சேலை...சாயமும் போகாது...எத்தனை முறை வேண்டு மானுலும் தோய்த்துக் கட்டிக்கொள் ளலாம..."

"நூல் சேலையோட விலையே பொன்னி! இப்ப பட்டுச்சேலை அள வுக்கு ஆகிவிட்டிருக்குதே..."

"ஆமாம்; நூல் விலை ஏறியபடி இருக்குதே......"

"நூல்சேலை விலை ஏறினதாலே நெசவாளிகளுக்கு அதிகமாகத் தானே பணம் கிடைக்கும், இப்ப ...."

"நெசவாளிக்கு எங்கே போய்ச் சேருது அந்தப்பணம்...நூல் வியா பாரி, ஆலை முதலாளி, இவர்களுக் குத்தான் போகுது, விலை ஏறின தாலே கிடைக்கிற பணத்திலே முக் கால் பங்குக்குமேலே......"

"நெசவாளியோட கூலியும் உயர்ந்துதானே இருக்குது..."

"உயர்ந்து, அவனுக்கு என்ன பலன்? உப்பும் பருப்பும். புளியும் மிளகாயும், அரிசியும் விற்கிற விலை யைப் பார்க்கறபோது நெச வாளிக்கு கூலி அதிகமானதாலே ஒரு பலனும் இல்லை என்பது தெரி யுதே. ஒண்ணிலே வந்தா ஒன்பதிலே போகுது......"

"அது உண்மைதான் பொன்னி! விலையும் நாளுக்கு நாள் ஏறிக் கொண்டுதான் போகுது; இறங்கு முகமே காணோம்..."

"சர்க்கார் திட்டம்போட்டு இறக் கினுத்தானே......"

"சர்க்காரை நடத்திக்கொண்டு இருக்கிற காங்கிரஸ் தலைவர்கள் விலை ஏறியிருப்பது கெட்டது அல்ல மக்களிடம் ஏராளமாகப் பணம் நட மாடுவதைத்தான் இந்த விலைஏற்றம் காட்டுகிறது என்று பேசிக்கொண் டிருக்கிருர்களே, ஏமு! எப்படி விலையைக் குறைக்க மனம் வரும் அவர்களுக்கு..."

"ஏழைகள் படுகிற கஷ்டம் தெரி யாதா இவர்களுக்கு...லால்பகதூர், ஏழ்மையிலே மூழ்கிக்கிடந்த குடும்ப மாமே. அவருக்குப் புரியாதா ஏழை களோட கஷ்டம்..."

ஒரு கதை தெரியுமா, பட்டு! ஒரு ஏழை, வெகு நாட்களாகக் கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தானும். கோயில் கோபுரவாசற்படியிலே நின்றுகொண்டு பிச்சை எடுப்பா னும், கூவிக்கூவி. பலபேர் இவ னுடைய கூக்குரலைக் காதிலே வாங் கிக்கொள்ளவேயில்லையாம். கோபம் வந்துவிட்டது..."

"வழியே போகிறவர்களைப் பார்த்து வாயிலே வந்தபடி திட்டி யிருப்பான்..."

"திட்டினு சும்மாவிட்டுவிடுவாளா ......நாலு அறை கொடுத்திருக்க மாட்டாளா..."

"பட்டு சொல்வது உண்மை. அப்படித்தான் நடந்திருக்கும் அவன் மனிதர்களைப் பார்த்துத் திட்டி யிருந்தா. ஆனுல் அவன் திட்டினது மனிதர்களையல்ல! கடவுளைத் திட்டி ஞன்..."

"மனிதர்கள் இவனைக் கண்டு பரிதாபப்பட்டுத் தர்மம் செய்யாதற் காக, இவன் கடவுளை ஏன் திட்ட ணும்?"

"மனம் குழம்பிப் போகிறபோது, சங்கடம் அதிகமாகிவிடுகிறபோது, இல்லாதவனுக்கு அறிவு எப்படி வேலை செய்யும். ஆத்திரம்தான் வரும்; கண்டபடிதான் பேசுவான்."

"பட்டு, அறிவுக் குழம்பிப்போன வன் மட்டுமல்ல, அறிவு நூலை எழு திய திருவள்ளுவரேகூட, அந்த அளவு ஆத்திரப்பட்டு, பிச்சை எடுத் துத்தான் ஒருவன் உயிர்வாழ வேண் டும் என்ற நிலை இருக்குமானுல், அப்படிப்பட்ட நிலையில் உள்ள உலகத்தைப் படைத்த கடவுளே அழிந்து போகட்டும் என்று பாடி யிருக்கிருர்..."

"பாரதியாரே பரவாயில்லைபோல இருக்குதே; பொன்னி! அவர், தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்றுதான் பாடினுர். திருவள்ளுர், கடவுளையே ஒழிக்கலாம் என்கிருரே ..."

"உலகிலே ஏழ்மைக் கொடுமை இருப்பதைக் காண்பவர்களுக்கு ஒருநாள் இல்லாவிட்டால் வேருெர் நாள், வள்ளுவருக்குவந்தது போன்ற ஆத்திரம் வரத்தான் செய்யும்..."

"அது உண்மைதான் பொன்னி! நீ, அந்தக் கதையைச் சொல்லு... பிச்சைக்காரன் கடவுளைக் கண்ட படி திட்டினுன். என்ன நடந்தது?"

"பகவானைத் திட்டினுல் என்ன நடக்கும்! அவன் வாய் புழுத்துப் போயிருக்கும். அப்படித்தானே கதை இருக்குது, பொன்னி!"

"இது ஒரு அறிவாளி எழுதிய கதை, பட்டு! நீ நினைக்கிறபடி இல்லை. அவன் வாய் புழுத்துப் போகவில்லை...கடவுள் அவனுக்குப் பெரிய செல்வத்தைக் கொடுத் தார்......"

"அந்த ஏழையுடைய அழுகுரல் மனிதர்கள் காதிலே விழாவிட்டா லும் மகேசன் காதிலே விழுந்திருக் கிறது; ஆண்டவன் அருளாலே அவன் கஷ்டம் தீர்ந்தது..."

"அதுதான் இல்லை, ஏமு! கஷ்டம் தீரவில்லை, ஆடம்பரமான வாழ்க்கை தான் அவனுக்கு. ஆலயத்திற்குத் தவருமல் போய்க்கொண்டிருந்தான். வேறு எந்தக் கஷ்டமும் இல்லை அவனுக்கு. ஒரே ஒரு கஷ்டந்தான், கோபுர வாசற்படியிலிருந்து கொண்டு, பிச்சைக்காரர்கள்போடும் கூச்சல் அவன் காதைக் குடைந்தது. கடவுளே! எனக்கு இவ்வளவு செல்வம் கொடுத்து என்ன பலன்! இந்தப் பஞ்சைகள் போடும் கூச்சல் என் காதைக் குடைகிறதே...இதுகளை ஏன் நாங்கள் வருகிற வழியிலே இருந்துகொண்டு கூவச் செய்கிருய், என்று கேட்டானும்..."

"பாரேண்டி அவனுடைய புத்தி போகிற போக்கை. இவனே ஏழையாக இருந்தவன்; இருந்தும் பணம் சேர்ந்தஉடன், ஏழை என்ருலே இவனுக்கே வெறுப்பு வந்துவிட்டதை..."

"அதுபோல ஏமு! ஒருவர் ஒரு காலத்திலே ஏழையாக இருந்தவர் என்று சொலலிவிட்டால் மட்டும் போதாது. அவர், தனக்கு வசதி கிடைத்தபோது, ஏழைக்கு என்ன செய்தார் என்பதைப் பொறுத்துத் தான், அவருடைய அருமையும் பெருமையும் இருக்கிறது..."

"உண்மையான பேச்சு. பெரிய இடத்திலே இருக்கிருர்கள். அவர்கள் மனம் வைத்தால் ஏழைக்கு எத்தனையோ விதமான உதவி செய்யலாம்..."

"உதவி செய்வது மட்டும் போதாது, ஏமு! இப்போதுகூட எத்தனையோ பேர், உதவிகள் செய்கிருர்கள். உலக கத்தோலிக்கர்களுக்குக் கண்கண்ட தெய்வம் போன்றவர் போப்பாண்டவர்; அவர் தமக்குக் காணிக்கையாகத் தரப்பட்ட இரத்தினக் கிரீடத்தையே விற்று, ஏழைகளுக்குச் செலவிடச் சொல்லிக் கொடுததுவிட்டார்..."

'எவ்வளவு கருணையான உள்ளம் அவருக்கு. கேட்கும்போதே நமக்கெல்லாம் அப்படிப்பட்டவரைப் போற்றவேண்டும் என்று தோன்றுகிறது..."

"கிருத்தவ மார்க்கத்தவர்களிலே பலர், ஏழைகளுக்கு, பஞ்சை பராரிகளுக்கு, தொழுநோய் பிடித்தவர்களுக்குத் தொண்டு செய்து வருகிருர்கள், பல காலமாக, பல நாடுகளில்..."

"நாம் நமது பக்தி அவ்வளவையும் தேர் திருவிழா வாணவேடிக்கை பிரசாதம் இவைகளிலேயே காட்டி விடுகிருேம்..."

"பட்டு சொல்வது போலத்தான் இங்கே. நான் சொல்ல வந்தது, ஏமு! ஏழைகளுக்கு இரக்கம் காட்டி உதவி செய்வது மட்டும் போதாது. அது சேற்றுக் குழியில் விழுந்தவனை வெளியே எடுத்து குளிக்கச் செய்து விடுவது போலத்தான்..."

"சேற்றிலே விழுந்தவனைச் சுத்தப் படுத்தத்தானே வேண்டும்."

"அதை நான் வேண்டாமென்று சொல்லவில்லையே. செய்யவேண்டியதுதான். ஆனு ஏமு! அந்தச் சேற்றுக் குழி இருக்கிறவரையில், இவனில்லாவிட்டால் இன்னொருவன் விழத்தான் போகிருன்...அதனுலே, அந்தச் சேற்றுக்குழியையேபோக்கி விட வேண்டும்..."

"அதாவது ஏழ்மையைப் போக்கி விட வேண்டும் என்று சொல்கிறே......"

"ஏன், விளக்கமாகச் சொல்லணுமா பொன்னி! அவ கொடுக்கற உபமானம் போதவில்லையா உனக்கு......"

"பொன்னி! நீ சொல்கிற நல்ல காரியம் நடைபெற வேண்டுமானு, மகான்கள் தோன்றவேண்டும்..."

"மகான்கள் தோன்ருமலா இருக்கிருர்கள்! நிறையப் பேர், பட்டு! கொண்டாடி, கும்பிட்டு, கோயில் கட்டி, பக்தி காட்டுகிருர்கள்,"

"ஏமு சொல்வது போலத்தான் கோயிலோ, மடமோ கட்டிவிட்டு எல்லாம சரியாகிவிடும் என்று எண்ணிக்கொள்கிருர்கள். நோய் அப்படியே இருக்கிறது."

"மகான்கள் சொன்னதுபோலவா அவர் பேராலே மடம் கோயில் கட்டிக்கொண்டிருப்பவர்கள் நடக்கிருர்கள்?"

"இல்லையே! அதனுல்தானே, தர்ம சொத்துக்களைப பற்றி ஒருவிசாரணை நடத்தி, முறை வகுக்கச் சொல்லி, சர்க்காரே ஒரு கமிட்டி ஏற்படுத்தினு..."

"ஓ! நீ, நம்ம சி. பி. ராமசாமி அய்யர் கமிட்டியைச் சொல்கிறயா......"

"அதென்னடிம்மா, 'நம்ம' சி. பி.ன்னு அவ்வளவு சொந்தம் கொண்டாடுகிறே..."

"இது இந்த நாட்டிலே பழக்கம் தானே ஏமு! யாராவது ஒருவர் பணக்காரராக பிரபலமானவராக இருந்தா, உடனே 'நம்ம'போட்டு சொந்தம் கொண்டாடுவது..."

"நான் ஒண்ணும் அந்தவிதமான எண்ணத்திலே சொல்லவில்லை...."

"கோபம் வேண்டாண்டி கண்ணு! உன்னைக் குறை சொல்லுவேனு! இந்த நாட்டுப் பழக்கத்தைச் சொன்னேன். தெரியுமா ஏமு! உனக்கு. அமெரிக்கக் குடிஅரசுத்தலைவர் தேர்தலிலே வெற்றிபெற்ருரே, ஜான்சன்......"

"ஆமாம்! எல்லோருமே பாராட்டுகிருளே ஜான்சன் பெற்ற வெற்றியை..."

"பாராட்டுகிரு! ஒரு பெரிய தலைவர்! நல்லவர்! என்பதாக. ஆனு, வடக்கே ஒருவர் ஜான்சனுேட 'ஜாதகத்தை'ப பார்த்துவிட்டு என்ன சொல்லியிருக்கிருர் தெரியுமோ..."

எல்லாக்கிரகங்களும் நல்ல இடத்திலே இருக்குது என்று சொல்லி இருப்பார்..."

"அப்படிச் சொன்னு அதிலே; ஆச்சரியப்பட என்ன இருக்குது? இந்த ஜோதிடர், ஜான்சன் போன ஜென்மத்திலே இந்தியாவிலேதான் பிறந்து வாழ்ந்து வந்தார், கங்கைக் கரையிலேதான் தவம் இருந்து வந்தார் என்று கூறி இருக்கிருர்..."

"பாரேன் அந்த ஜோதிடரை! உலகப் புகழ்பெற்றுவிட்டார் ஜான்சன் என்ற உடன், அவர் போன ஜென்மத்திலே இந்த நாட்டிலேதான் இருந்தார் என்று சொல்லி நம்ம நாட்டுக்குப் பெருமை தேடிக்கொள்கிருர்..."

அது நம்ம நாட்டுக்குப் பெருமை என்று எண்ணிக்கொண்டுதான் அந்த ஜோதிடர் சொல்லியிருக்கிருர் ஆனுல் அவர் பேச்சை அலசிப் பார்த்தால் வேறே விதமாக இருக்கும்..."

"ஏன் பொன்னி! போன ஜென் மத்திலே இங்கே இருந்து கங்கைக் கரையிலே தவம் செய்ததாலே ஜான்சனுக்கு இந்த ஜென்மத்திலே அமெரிக்காவிலே பெரிய தலைவரா கிற 'பாக்யம்' கிடைத்திருக்குது, அதுதானே பொருள், அந்த ஜோதி டர் சொன்னதற்கு..."

"ஏமு! போன ஜென்மத்திலே இங்கே இருந்து தவம்செய்து, ஜான் சன் இப்ப அமெரிக்காவிலே பெரிய தலைவராகிவிட்டார் என்று சொல் கிறளே, இதிலே இருந்து, ஜான்சன் போன ஜென்மத்திலே இங்கே இருந்து தவம் செய்தபோது, கட வுளே! என்னை மறுபடியும் இந்தியா விலே பிறக்கும்படிச் செய்யாதே. அமெரிக்காவிலே பிறக்கும்படிச் செய்! என்று வேண்டிக்கொண் டார்என்றுதானே ஆகிறது? அப்படி என்றால், இந்த நாட்டிலே பிறக்கக் கூடாது என்று அவருக்குத் தோன் றும் அளவுக்கு, இந்த நாடு மோச மானது என்ற வெறுப்பு உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது என்றுதானே பொருள் ஆகிறது..."

"நீ சொல்வதைக் கேட்கும்போது அந்த ஜோதிடன் வீணான வம்பு பேசினன் என்றுதான் தோணுது பொன்னி! உள்ளபடி இந்த நாட்டி டம் அவருக்கு மதிப்பு இருந்திருந்தா, பகவானே! மறுபடியும் நான் பாரத தேசத்திலேயே பிறக்கவேண்டும் என்றுதானே தவம் செய்திருக் கணும்......"

"ஆமா, தவம் செய்து, கடவுள் கடாட்சம் பெற்று, இந்த நாட்டி லிருந்து அவர் தப்பித்துக்கொண்டு, வேறு நாடுசென்று சிறப்புடன் வாழ்கிறார்."

"போதுமடி பொன்னி, நீ புட்டுப் புட்டுக் காட்டினது......என்னமோ எண்ணிக்கொண்டு அந்த ஜோதி டன் சொல்லிவைத்தான் அப்படி... வீண் பெருமை......"

"ஏமு! மார்க்ட்வைன் என்ற ஒரு பெரிய எழுத்தாளர், நகைச்சுவை யிலே திறமை உள்ளவர். அவர் ஒரு முறை காசிக்கு வந்திருந்தாராம். காசியிலே, காசுபறிப்பதற்காக ஒரு கூட்டம் உலாவியபடி இருக்கும். அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு வன் மார்க்ட்வைனைப் பார்த்து, 'கங்கா ஜலத்தின்' மகிமையைப் பற்றி நிறையப் பேசினனும்"

"ஆமாம், சொல்கிறார்கள். எல் லாப் பாபமும் போய்விடும், எந்த 'ரோகமும்' போய்விடும் அவ்வளவு மகிமை கங்கைக்கு என்று..."

"சற்று அதிகமான அளவுக்கு அளந்திருக்கிறன் மார்க்ட்வைனிடம் இந்த ஆற்று நீரில் குளித்தால், எல்லா நோய்களும் போய்விடும். இதிலே எந்த விஷப்பூச்சிகளும் கிடையாது — இந்தத் தண்ணீரின் மகிமையால் விஷப்பூச்சிகள் செத்து விடும் என்றனும் அந்தக் காசு பறிப் பவன்"

"காதிலே வாங்கிக்கொண்டிருக்க மாட்டார் அந்த மார்க்டுவையின்"

"இல்லை, இல்லை. கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்துவிட்டு; உண்மையாகத்தான் இருக்குமய்யா, நீ சொல்வது. இங்கே அடிக்கும் நாற்றத்தைப் பார்த்தாலே தெரி கிறது. இந்தத் தண்ணீர் எந்த உயி ரையும் கொன்றுவிடும் என்று. நானே சாகவரவில்லை. அப்படி யிருக்க இதிலே ஏன் என்னைக் குளிக்கச் சொல்கிறாய் என்று கேட் டாராம்..."

சரியான குறும்புக்காரர்போல இருக்கிறது, மார்க்டுவையின்; எங்களவர்கூட, ஏகப்பட்ட குறும்பு"

"சரி, சரி, பட்டு! நேரம் அதிக மாகிவிட்டது. ஏமுவுக்கு 'அவர்'மீது கவனம் வந்துவிட்டது, புறப்படு, புறப்படு......"

"இருடி பொன்னி! இன்னும் கொஞ்சநேரம்..."

"அதோ கேட்குதம்மா இருமல் சத்தம்...மணி அடித்தாகிவிட்டது, ரயில் புறப்பட்டாகவேண்டும்..."

✽

விற்பனையாகிறது!

அண்ணாவின்
கருத்தோவியங்கள்

பாவையின் பயணம்
ரூ. 1-50

அரசாண்ட ஆண்டி
ரூ. 1-50

மதுரைக்கு டிக்கட் இல்லை
ரூ. 2-00

கிடைக்குமிடம்:
பரிமளம் பதிப்பகம்
சின்ன காஞ்சிபுரம்.

காஞ்சி

பொங்கல் மலரில்

சுவைமிகு கனிகளென

C.N.A

தந்திடும்

பித்தளை அல்ல! பொன்!!

விழுப்புரம் சந்திப்பு

வழுக்கி விழுந்தவர்கள்

உடை அணியுமுன்

கல்லும் கண்ணாடித்துண்டும்

'சுமார்' சுப்பையா

காலிழந்தான்!

இத்தனை சிறுகதைகள் உள்ளன!

கதைகள் ஒவ்வொன்றும்
கருத்துத் தெளிவளிக்க !!

படிக்கப் படிக்க இனித்திடுவது மட்டும் அல்ல!
சுவையுடன் பயனும் அளித்திடும் கருத்தோ-
-வியங்கள் மலரில் உள்ள கதைகள்!

பொங்கல் மலர்!

புதுமலரின் எழில் கொண்டது!

உங்கள் இல்லத்திற்கு மகிழ்ச்சிதரும்
மணிவிளக்கு !!

விலை 1 ரூ 50

[illegible] காஞ்சிபுரம், 36, திருக்கச்சிநம்பி தெரு, "அல்லி" அச்சகத்தில், [(உரிமையாளர்) சி. என். அ. இளங்கோவனால்
[illegible]